அழகிய தங்க நகைத் தெரிவென்றதும் நங்கையர் மனங்களில் ரீங்காரம் செய்பவள்.
சிறி நதியா நகை மாடம்
2G, ஸ்ரான்லி (அருச்சுனா) வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பிரமியமான மோஸ்தர்களில் தரம் குன்றா தங்கப்பவுண் நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்
சிறி நதியா நகை மாடம்
(மீண்டும் மீண்டும், செல்லத்தூண்டும் காண்போர் மயங்கும் காட்சிக் கூடம்)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 16 திங்கட்கிழமை (30 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 64

# ஈழ அகதிகள் விடயத்தில் கனடாவும் கடும் போக்கைக் கடைப்பிடிக்கும்!

## அகதிகள் சபை நடவடிக்கையில் திடீரெனப் பெரும் மாற்றங்கள்

கொழும்பு, ஜனவரி 30

ஈழத் தமிழ் அகதிகள் விடயத்தில் கனடாவும் கடும்போக்கைக் கடைப்பிடிக்கும் என்று தெரியவந்துள்ளது.

ஈழத் தமிழர்கள் கனடாவில் தஞ்சம் பெறுவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அகதிகள் சபை தனது நடவடிக்கைகளில் திடீரெனப் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது.

சுவிற்சர்லாந்து, சுவீடன், நெதர்லாந்து, நோர்வே ஆகிய ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றி இப்போது கனடாவும் தஞ்சம்கோருவோரைக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் போர் இடை நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளதைத் தொடர்ந்தும் —

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்தும் —

மேற்கு நாடுகள் தமிழ் அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கும் தமது நடவடிக்கைகளை மாற்றத் தொடங்கியுள்ளன.

போர் இடைநிறுத்தத்தை கண்காணிக்க அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்களில் நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதற்கும், பிரஸ்தாப நாடுகள் அகதிகள் விடயத்தில் தமது அணுகுமுறையை மாற்றுவதற்கும் தொடர்பு இருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

இது வரை காலமும் பெரும் எண்ணிக்கையிலான ஈழத் தமிழ் அகதிகள் சிரமம் எதுவும் இன்றித் தஞ்சம் பெறக்கூடிய நாடாக கனடா விளங்கி வந்தது.

வெளிநாட்டு அகதிகள் விடயத்தில் ஐரோப்பிய நாடுகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் எம்.பிக்கள் இணைந்து புதிய அமைப்பு

கொழும்பு, ஜன. 30

நாடாளுமன்றத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் எம் பிக்கள் ஒன்றிணைந்து தமிழ்ச் சமூகத்தின் நலன்களைப் பேணும் நோக்கில் தமிழ் ஐக்கிய மன்றம் (Tamil Unity Forum) என்ற பெயரில் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாக 'சண்டே ஒப்சேவர்' செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-ச)

## மீண்டும் போர் தொடங்கும் அபாயம் எழுந்துள்ளதாம்

### செய்தி ஏஜென்சி கருத்து

மணிலா, ஜன. 30

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் நடைபெற வேண்டிய பேச்சுவார்த்தை தொய்ந்துபோய் இருப்பதால்—

போர் இடை நிறுத்தம் முறிந்து மீண்டும் போர் தொடங்கும் அபாயம் எழுந்திருப்பதாக — ஏ. எவ். பி. செய்தியாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைதியை விரும்புகிறார்களா என்று தமக்கு சந்தேகம் எழுந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கருத்து வெளியிட்டிருப்பதோடு—

பேச்சுவார்த்தை தோல்வி கண்டால் இராணுவம் புலிகளை திறம்பட எதிர்கொள்ளும் என்று கூறியிருப்பது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கதிர்காமர் அமெரிக்கா பயணம்

கொழும்பு, ஜன. 30

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது அமைச்சின் உயரதிகாரிகள் சகிதம் அமெரிக்கா பயணமானார்.

வாஷிங்டனில் தங்கியிருக்கும் போது அமைச்சர் கதிர்காமர் அமெரிக்க உப ஜனாதிபதி அல்கோ, வெளிவிவகார அமைச்சர் வாறன் கிறிஸ்தோபர் மற்றும் கிளின்ரன் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலை குறித்தும் கிளின்ரன் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளுக்கு அமைச்சர் கதிர்காமர் விளக்குவார்.

அமெரிக்காவில் தங்கியிருக்கும் போது அமைச்சர் கதிர்காமர் அங்குள்ள பல்கலைக் கழகங்களில் விசேட சொற்பொழிவுகளையும் நிகழ்த்தவுள்ளார்.

இனப்பிரச்சினை, திறந்த நிர்வாகம் போன்ற விடயங்கள் குறித்தும் அவர் விரிவுரைகளை ஆற்றுவார்.

வர்த்தக அமைச்சர் கி. பி. குணரத்தினாவும் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு பிரிவு அனுமதி இல்லை: பௌஸியின் மட்டக்களப்பு விஜயம் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 30

சுகாதார சமூக சேவைகள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸியின் மட்டக்களப்பு விஜயம் திடீரென ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'அமைச்சர் பௌஸி நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் பாதுகாப்புத் தரப்பில் இருந்து அதற்கான அனுமதி கிடைக்காததை அடுத்தே அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அழைப்பாணை கையளிக்காததால் கல்வி அமைச்சர் பத்திரன நீதி மன்றுக்கு வரவில்லை!

கொழும்பு, ஜன. 30

காலி நீதிமன்றம் ஒன்றில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட உத்தரவை ஏற்று கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான கடந்த வெள்ளியன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதனால் வழக்கை அவதானிப்பதற்காக நீதிமன்றத்துக்கு வந்திருந்த பெரும் எண்ணிக்கையானோர் ஏமாற்றம் அடைந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று நடந்த தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாக அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன மீது குற்றஞ்சாட்டி காலி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து வழக்கு விசாரணைக்காக அவரை கடந்த வெள்ளியன்று மன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது.

ஆனால் நீதிமன்றின் அழைப்பாணையைக் கையளிப்பதற்காக பிஸ்கால் ஊழியர் அமைச்சர் பத்திரனவின் வீட்டுக்குச் சென்ற சமயம் அவரது வீடு பூட்டப்பட்டிருந்ததாம். இதனால் ஜனவரி 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பாணை அவரிடம் கையளிக்கப்படவில்லை.

இதனை அடுத்து காலி மேலதிக நீதிவான் ருவன் பெர்னாந்து அழைப்பாணையை புதுப்பித்து பெப்ர

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள் பேச்சில் பங்கு கொள்வது குறித்து அமெரிக்க அரசாங்கம் மகிழ்ச்சி தெரிவிப்பு

வாஷிங்டன். ஜன. 30

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணங்கி, அதில் பங்கு கொள்வது குறித்து அமெரிக்கா மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கு நாம் ஊக்கம் அளிப்போம் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் தாம் விடுதலைப் புலிகளைக் கண்டித்து வந்தது உண்மையே எனினும், இப்போதைய அவர்களின் நிலைப்பாடு குறித்து திருப்தி அடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை—

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் இடைநிறுத்தம் இரண்டு வாரங்களாக வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை அவதானித்ததால் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கும் என்று கருதுவதாலேயே —

அது சம்பந்தமாக ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இருந்து மேலதிக விவரங்களையும், பிந்திய நிலைப்பாட்டையும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலமைப் பரீட்சையில் இவ்வாண்டு முதல் மாற்றம்!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பாடத்திட்டம் இந்த ஆண்டில் இருந்து திருத்தியமைக்கப்பட இருப்பதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் வயதுக்கு ஏற்ற வகையில் வினாத்தாள்கள் அமைவதில்லை என்றும் எனவே வினாத்தாள்களில் மாற்றம் கொண்டு வரப்பட விருப்பதாகவும்— அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சைக்காக அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் போதனை பெறத் தேவையில்லை என்றும்—

பொது அறிவை பரீட்சிக்கும் வகையில் அவர்களுக்கான பரீட்சை அமையும் என்றும்— அவர் தெரிவித்தார். (ஐ-3)

## பாதுகாப்புக்கு ஆயுதம் தருமாறு புளொட், ரெலோ கோரிக்கை!

### சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன. 30

கிழக்குப் பகுதியில் உள்ள ரெலோ, புளொட் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாதுகாப்புக்காக தமக்கு ஆயுதங்களை வழங்குமாறு பொலிஸாரிடம் கோரியுள்ளனர்.

கிழக்கில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரெலோ, புளொட் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 80 உறுப்பினர்கள் தற்போது மட்டக்களப்பு பகுதியில் உள்ளனர் என்றும்—

அவர்கள் பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைத்து விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை வழங்கி வருகின்றனர்.

போர் இடைநிறுத்த ஒப்பந்தத்தின்படி விடுதலைப் புலிகள் அப்பகுதிகளில் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர். ரெலோ, புளொட் உறுப்பினர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குக் கூடச் செல்லமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போர் இடை நிறுத்தம் அமுலில் உள்ள இவ்வேளையில் புளொட், ரெலோ உறுப்பினர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது இக்கட்டான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் யுவதியைக் கொன்று பசி தீர்த்த மூன்று நாய்கள்!

### பல்கேரியாவில் கோரச் சம்பவம்

சோபியா, ஜன. 30

பசியால் வாடிய மூன்று நாய்கள் 21 வயதான இளம் பெண் ஒருவரை கடித்துத் தின்று தமது பசியைப் போக்கிக் கொண்டன.

மத்திய பல்கேரியாவில் உள்ள செவிலாலோ என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

'கராஜ்' ஒன்றைக் காவல் செய்வதற்காக நின்ற அந்த ஜேர்மன் ஷெப்பர்ட் இன நாய்கள் மூன்றும் பசி தாங்க முடியாத நிலையில் இரண்டு மீற்றர் உயரமான வேலியைத் தாண்டி வெளியே பாய்ந்து வந்து வீதியில் சென்று கொண்டிருந்த இளம்பெண்ணான டனிலா சன்கோவா என்பவரைக் கடித்துக் குதறிக் கொன்று தின்றுள்ளன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க அமைச்சரவையின் அனுமதி தேவை!

### மானிய ஆணைக்குழு துணைவேந்தருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம். ஜன. 30

யாழ். பல்கலைக் கழகத்துக்கு கூடுதலான மாணவர்களை அனுமதிப்பதாயின் அதற்குஅமைச்சரவையின்அங்கீகாரம் தேவை என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் கே.குணரத்தினத்துக்கு அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தத் தக்க வகையில் அதிக எண்ணிக்கையான மாணவர்களை அனுமதிக்க வேண்டும் எனக்கோரி துணைவேந்தர் பேராசிரியர் கே குணரத்தினம் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் அனுமதி தொடர்பான அரசின் கொள்கை[illegible] மாணவர்களை அனுமதிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



## படைத்துறைத் தலைமைகளில் விரைவில் முக்கிய மாற்றங்கள்!

### சந்திரிகாவின் சிபார்சின் பேரில் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 30

ஸ்ரீலங்காவின் படைத்துறையில் விரைவில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறக்கூடும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சிபார்சுக்கு அமைய இந்த மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்த பின்னர் முதல்தடவையாக இந்த மாற்றங்கள் இடம்பெற விருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

படை உயரதிகாரிகளின் அரசுக்கு விரோதமான நடவடிக்கைகள் மற்றும் திறன் அற்ற செயற்பாடுகள் காரணமாகவே படைத்துறையில மாற்றங்கள் செய்யப்பட விருப்பதாக நம்பப்படுகிறது.

தற்போது முக்கிய பதவிகளை வகிப்போர் பலர் இந்த மாற்றத்தின்போது பதவி நீக்கம் செய்யப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[ஐ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

45 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. குகன், 15/2, ராதா ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (34903)

5 மாதம் நிரம்பிய சில்கி கோழிகளும் 10 நாட்கள் நிரம்பிய இனிக் கோழிக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. கிடைக்கும் இடம்: கந்தசாமி அன் சன்ஸ், 16, ஆடியபாதம் வீதி, நல்லூர். (34910)

Golden Comet பேட்டுக் குஞ்சும், புறொயிலர் குஞ்சும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், 9, றக்கா வீதி, [Bar இற்கு முன்பாக], யாழ்ப்பாணம். [34898]

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cupboards) விற்பனைக்குண்டு. சனோ வெல்டிங் வேக்ஸ், 379, பீச்றோட், குருநகர், (பாடும்மீன் சன சமூக நிலையத்திற்கு முன்பாக) (8215)

Honda CD 70 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (34897)

## WANTED

Applications are invited from Suitable candidates for the post of Cost Accounts clerk cum Store clerk. age below 40 years. Apply before 31st Jan. 1995 No. 754, C/o Uthayan Jaffna. [சி-444]

## காணவில்லை

2-1-95 திங்கட்கிழமை காலை தொடக்கம் காரைநகரை சேர்ந்தபூபாலபிள்ளை சிவானந்தாலை காணவில்லை. இவர் ஒரு மனநோயாளி. இவரைப் பற்றி அறிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்: சி. த. பூபாலபிள்ளை, 33, கடையிற்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [34095]

## தவறிவிட்டது

வி. கனகசபை ஆகிய நான் தட்டாதெரு சந்தியிலிருந்து இணுவிலுக்கு செல்லும் வழியில் புத்தகங்கள், அல்பம் அடங்கிய பாடசாலைப் பை ஒன்று தவறிவிட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தம்பிப்பிள்ளை மகிந்தர்கள் நகைமாடம், காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [34902]

## துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களும் தொடர்பு கொள்ளவும். சகல குறிப்புகளும் உண்டு எல்லா நாட்களிலும் படம் குறிப்புடன் தொடர்புகொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட், மல்லாகம். [7875]

## திருமண மலர்

"ஜோஸ்யர் பெற்றவர்" இதழ் திருமண மலராக வெளிவருகின்றது. திருமணம் பற்றிய அரிய விடயங்களை உள்வாங்கவும், பலருக்கு சொல்லவும் ஆறு ரூபாய்க்கு நாளை கிடைக்கும். [34889]

## மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் உண்டு. சஜன்ஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத வீதி, சுன்னாகம். [7879]

## அலங்காரம் செய்தல்

திருமணப் பெண்களுக்கு சிறந்த முறையில் குறைந்த செலவில் அலங்காரம் செய்வதற்கு நாட வேண்டியது: [illegible] வரராயர் ஒழுங்கை, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (34900)

## ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி.வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

## புலமைப் பரிசில் - 95

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம் [8187]

---

## RADIO & ELECTRONIC TECHNICIAN COURSE

புதிய வார இறுதிநாள் வகுப்புக்கள்

ஆரம்பம்: 04 - 02 - 1995

சிறந்த இலகு விரிவுரைகள் கூடிய செய்முறைப் பயிற்சிகள் குறைந்த தவணைக் கட்டணங்கள்

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. Peter's Lane,
Jaffna.

[சி-336]

---

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 09 — 03 — 1917



அரன் அடியில்: 01 — 02 — 1984

**திருமதி அருபதி சின்னத்தம்பி**
(பளை, தெல்லிப்பழை)

திதி: 30 - 1 - 1995

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சிவநெறி வழுவா எங்கள் அன்னையே; ஆண்டுகள் பதின் ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையாத ஒளித்தீபமாக ஒளிவீசும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமாகிய அன்னை பராசக்தியைப் பிரார்த்திக்கும்:

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோயில் வீதி,
மல்லாகம். (34907)

---

## உன் நினைவுகளுடன்....

மலர்வு: 21 — 10 — 1949



உதிர்வு: 31 — 12 — 1994

**அமரர் கந்தையா ஜெகதாஸ்**
(இலங்கை வங்கி - சாவகச்சேரி)

எம்மையெல்லாம் ஆறாத் துயரில் தவிக்கவிட்டு திடீரென இறைவனடி சேர்ந்து விட்ட எம் பாசத்துக்குரியவனே!

உன் அன்புத் தாயார் - மாமாக்களின் ஆத்மாக்களுடன் இணைவதற்காகவா எம்மை விட்டுப் பிரிந்தாய்?

உன் பசுமையான நினைவுகள் எம் நெஞ்சங்களை ஈரமாக்கிக் கொண்டிருக்கின்றனவே! உன் ஆத்மா சாந்தியடைவதாக.

அமரரின் அந்தியேட்டி வைபவம் இன்று (30-01-95) அவரது இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

"ஜெகஜோதி பவனம்",
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (34901)

---

கலை, வர்த்தக கல்லூரி

## C. C. A.

374, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

**G.C.E.A/L95**

கணக்கியல்
பிரத்தியேக வகுப்பு

**PERSONAL CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்

ஆசிரியர்: K. சிறி
B Com (Hons)

இன்று ஆரம்பம்:

**30 - 01 - 95**

மாலை 5-00 மணி

திங்., செவ்., வியா., வெள்ளி 5—6

குறிப்பிட்ட அளவு மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

- நிர்வாகி

(சி-327)

---

பருத்தித்துறை, கோட்டு வாசல்
அருள் மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்

# அபிராமிப்பட்டர் விழா

இன்று **30 - 01 - 1995**

திங்கட்கிழமை பி. ப 2-00மணி முதல் அபிராமிப்பட்டர் விழா நடைபெறும்

பிற்பகல் 2-30மணிவரை
புற்றளை சித்தி விநாயகர் ஆலய பஜனைக் குழுவினரின் பஜனை

4-00மணிக்கு: மங்கள இசை
நாதஸ்வர மேதை அளவையூர்
திரு. என். பத்மநாதன் குழுவினர்

பாட்டு:
இசைக்கலைமணி சலாவித்தகர்
செல்வி ஜெயந்தி செல்லையா
(உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் இசைக்கல்லூரி)

சிறப்பு சொற்பொழிவுகள்:
செல்வி அ. கனகரட்ணம் B. A.
(அதிபர், புற்றளை மகா வித்தியாலயம்)
சிவத்தொண்டன்
திரு. ப. ஞானேந்திரன்
(சோதிடர் கலாநிதி பருத்தித்துறை)

தலைப்பு: "இந்து சமயத்தின் மகிமை"

அருள் ஆசியும் சிறப்புரையும் வழங்குபவர்கள்
கலாநிதி சிவகாமசிரோன்மணி, சிவகாமஞானி
மறைத்திரு அன்னைதாசன்
சிவப்பிரம்மஸ்ரீ அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
(இந்துமத குருபீடாதிபதி நாயன்மார்கட்டு-யாழ்ப்பாணம்)

சிவாகம கிரியா ரத்தினம், ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள்
(பிரதமகுரு; சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் தேவஸ்தானம், வெல்வில் சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்)

அபிராமி அந்தாதி இசை ஆராதனை
இன்னிசைவேந்தர், சங்கீதபூசணம்
திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்

நன்றியுரை:
திரு ஆ. வ. தங்கராசா
(முன்னைநாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

—விழா உபயகாரர்

(சி 454)

---

## இன்றே முந்திக்கொள்ளுங்கள்

வாடிக்கையாளர்களே!

பத்திரிகை விளம்பரத்தின்படி மின்சாரம் கிடைப்பதற்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதால் உங்கள் வீட்டு மின்சார உபயோகப் பொருள்கள், ரி. வி., டெக் Audio Hits. Two in one sets, மின் உபயோகப் பொருள்கள் அனைத்தும் பல ஆண்டுகள் பாவிக்கப்படாமல் இருப்பதால் அவைகள் மின்சாரத்தில் இயங்க தயாராக உள்ளனவா என பரிசோதனை செய்து உத்தரவாதத்துடன் சேவிஸ் செய்து அவற்றில் உள்ள பிழைகளை குறைந்த செலவில் திருத்திப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே எம்மை நாடுங்கள்.

டில்கா
**வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்**
284, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளச் சந்தி,
(வானவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
கிளை: கண்டி வீதி
சாவகச்சேரி. (சி-331)

---

வட இலங்கை
தொழில் நுட்பக் கல்லூரி

## கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: **01 - 02 - 1995**
(வார நாள் வகுப்புகள்)

**Introduction to Computer and BASIC Language**

- ★ கூடிய செய்முறைப் பயிற்சியும், தவணைமுறைக் கட்டண வசதியும்
- ★ திறமையான மாணவர்களுக்கு விசேட மேலதிக பயிற்சிக் காலம்.
- ★ பெறுமதியான சான்றிதழ்
- ★ திறமையான ஆசிரியர் குழு

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE.
JAFFNA.

[சி-337]

---

# றோட்டறி ஆண்டு விழா கட்டுரை, பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன 30
சர்வதேச றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவையொட்டி, யாழ். றோட்டறிக் கழகம் தமிழ்-ஆங்கில மொழி மூல பேச்சு, கட்டுரைப் போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்தவுள்ளது.

14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டுமே போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

போட்டிக்குரிய விண்ணப்பங்கள், ஆக்கங்கள் என்பன பாடசாலை அதிபர் அல்லது உப அதிபர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டே அனுப்பப்பட வேண்டும்

பேச்சுப் போட்டிக்குரிய விண்ணப்பங்களை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்பாகவும்.

கட்டுரைப் போட்டிக்கான ஆக்கங்களை அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு முன்பாகவும் அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

(ஐ-14)

---

சிவமயம்
ஊரெழு
அருள்மிகு ஸ்ரீ வீரசுத்தி விநாயகர் ஆலய
மஹோற்சவ கால

## தெய்வீக பேருரைகள்

(18 தினங்கள்)

விடயம்:
**விநாயக புராணம்**

நிகழ்த்துபவர்:
தமிழருவி த சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

காலம்: 30 - 01 - 1995 — 16 - 02 - 1995
இரவு 8-30 மணிமுதல் 9-30 மணி வரை

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

- தேவஸ்தானம்.

[34917]

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**B. A.**
**B. COM** **PART - I**
(யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

பேராதனைப் பல்கலை **B. A. FINAL**

பிரிவு I புதன், வெள்ளி 6-30 — 7-30 a.m

ஆரம்பம்:- **1 - 2 - 1995** புதன்

பிரிவு II சனி. ஞாயிறு 3-00 — 4 00

ஆரம்பம்:- **4 - 2 - 1995** சனி 6-30

பொருளியல்
**S. வரதராஜன்**

(சி-324)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**யோகம்மா சின்னத்துரை**
(லில்லிமலர்)

பிறப்பு: 20 — 10 — 1924
இறைபதம்: 10 — 02 — 1994

திதி: 30 — 01 — 1995

கருவிலே எமைச் சுமந்த வேளை முதல் - தனைமறந்து
காலமெல்லா மெமக்காக வாழ்ந்தவளே!
அஞ்சேலென்று அரவணைத் தெமக்கு
ஆறுதல் தந்த அன்னையே!
கூற்றுவன் வந்த போது
கூப்பிட்ட குரலுக்கிரங்கி சென்றனையோ
இரக்கம் நிறைந்த இனிய அம்மா - என்றும்
இறவாது உன் இனிய அன்பு.

பாசமிகு கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

துரைமலர்ப் பொய்கை,
இணுவில் மேற்கு,
இணுவில். (34842)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிகாவின் போர்க்குணம்

விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லையானால் நான் போருக்குச் செல்வேன் என்று கூறவில்லை. ஆனால் நன்கு ஆயுதம் தரித்த இராணுவத்தைக் கொண்ட, மன உறுதியும் நேர்மையும் உடைய அரசாங்கத்தினால் போரில் வெற்றி காண முடியும் என்பதை மட்டும் கூறிவைக்க விரும்புகிறேன்—

பிரெஞ்சு நாளேடான ''லி மொண்டி''க்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு பயமுறுத்தி இருக்கிறார்!

தாம் அசல் ஸ்ரீலங்கா அரசியல்வாதி என்பதனை, இந்தச் செவ்வி மூலம் சந்திரிகா படம்பிடித்துக் காட்டிவிட்டார். பதவிக்கு வருமுன்னர் — எதிர்க்கட்சியில் இருக்கும்போது — சொல்வது அல்லது போதிப்பது ஒன்று; பதவியில் அமர்ந்ததும் முன்னர் சொன்னதற்கு நேர் மாறாக சொல்வது அல்லது செய்வது; என்பதே ஸ்ரீலங்கா அரசியல் பாரம்பரியமாக இருந்து வருகிறது. தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இரத்தத்தில் ஊறிவிட்ட குணாம்சம் அது அந்த இரத்தம் சந்திரிகாவிலும் தப்பாமல் ஓடுகிறது!

ஆறு மாதங்களுக்கு முன்னர் எதிரணியில் இருந்த போது, வடக்கு-கிழக்குப் போரை, எவருமே வெல்ல முடியாத பயனற்ற போர் என்று கூறியவர் சந்திரிகா.

அதன் பின்னர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசும் போது, போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, போருக்குச் செலவாகும் பணத்தை பொருளாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப் போவதாக வெட்டி முழக்கியவரும் அவரே.

ஆனால் ஜனாதிபதி பதவியில் அமர்ந்து, இரண்டரை மாதங்கள் மட்டுமே அதிகாரங்களை அனுபவித்ததும், அதனால் போதை தலைக்கேறியவராக அரசாங்கம் போரில் வெல்லும் என்று பிதற்றுகிறார்!

விடுதலைப் புலிகளுடன் தமது அரசு பேச்சு வார்த்தை நடத்துவதை இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் சாதனையாகக் கூறிப் பெருமைப்பட்டவர் இதே சந்திரிகா தான். ஆனால் இப்போது விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லையானால்,...... என்று அவர்கள் மீது நம்பிக்கை வைக்காதவராகப் பேசுகிறார்.

''நான் போருக்குச் செல்வேன் என்று கூறவில்லை'' என்று சந்திரிகா சொல்லாடல் நடத்தினாலும், அவரிடம் போர்க்குணம் குடிகொண்டுவிட்டது என்பதே மறைமுகமான பொருளாகும். இதனைசந்திரிகாவை செவ்வி கண்ட 'லீ மொண்டி'யின் செய்தியாளரும் நன்கு புரிந்துவிட்டார்.

அதனாலேயே அவர் தமது செய்தியின் ஓரிடத்தில் ''போரை மீளத் தொடங்க நேரிடும் என்று அச்சுறுத்தினார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

போரை விரும்பாதவர் என்றும், சமாதானத்தையே தமது கொள்கையாக வரித்துக்கொண்டவர் என்றும் வர்ணிக்கப்பட்ட சந்திரிகா போர்க்குணம் கொண்டவராக மாறிவிட்டார்! ஜே ஆரின் பாணியில் ''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று விடுதலைப் புலிகளை மிரட்டும் — எச்சரிக்கும் — சுடும் தொனியில் பேசுகிறார்.

சமாதானப் பேச்சு மேசைக்கு வந்துவிட்டு, மிரட்டிக் காரியத்தைச் சாதிக்க நினைப்பது சுத்தமான, மொத்தமான முட்டாள் தனம். பேச்சுவார்த்தை குலைந்து, முறிந்து அதன் பின்னர் போரை நடத்தப் போவதாகக் கூறுவது வேறு. பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டே ''போர் நடத்தி உங்களை வெல்லுவேன்'' என்ற தொனியில் எச்சரிப்பது ஜனநாயக மற்றும் அரசியல் நாகரிகம் இல்லாத, இராஜதந்திரமோ சாதுரியமோ மருந்துக்கும் இல்லாத பண்பற்ற செயலாகும். இதனை உணர்வதற்கு சந்திரிகாவுக்கு அரசியல் முதிர்ச்சி போதாதோ...?!

நீர்ப்பாசன, மின்சக்தி எரிபொருள்

## அமைச்சில் இடம்பெற்ற ஒழுங்கீனம் பற்றி விசாரணை

கொழும்பு, ஜன. 30

நீர்ப்பாசன மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் காணப்படும் ஒழுங்கீனங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழு பொது மக்களிடம் இருந்து தகவல்களைப் பெற ஆரம்பித்துள்ளது.

1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் முறைகேடான வகையில் வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், பயிற்சி வாய்ப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து சட்டத்தரணி எஸ்.ஏ. பிரேமரத்தின தலைமையிலான அந்த விசாரணைக் குழு முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும். [இ-ஐ]

மட்டக்களப்பில்

## மூளைக்காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவிவரும் மூளைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

முதல் நடவடிக்கையாக அங்கு நுளம்பு ஒழிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென 3லட்சம் ரூபா செலவில் இரு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் மலத்தியோன் தெளிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் மூளைக் காய்ச்சல் காரணமாக 15பேர் வரை உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது (ஐ)

## திணைக்களம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். பழைய பூங்காப் பகுதியில் இயங்கி வந்த காணிப்பதிவுத் திணைக்களம், இப்பொழுது யாழ். செயலக வளாகத்திலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்குகின்றது. (க-7)

## முட்டை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு முட்டை 4ரூபா 50 சதத்திற்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

மீன் விலை வீழ்ச்சியடைந்துள்ளதை அடுத்து முட்டைப் பாவனையாளர்கள் மீனில் நாட்டம் கொண்டுள்ளமையே இதற்கான காரணமென்று அறியவருகிறது. (க-4)

# அரசின் கொள்கைப் பிரகடனத்தை ஏற்க முடியாது என்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஜன 30

அரசின் பொருளாதாரக் கொள்கைப் பிரகடனம் கம்பெனிகளுக்கு நாட்டை அடகு வைத்துள்ளது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது

இரத்தினபுரி மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார முன் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசின் கொள்கைப் பிரகடனத்துக்கு நாம் ஆட்சேபம் தெரிவித்தபோது அது குறித்து எம்முடன் கலந்துரையாடப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். அதன் பின்னர் அவ்வாறு அவர் எங்களுடன் கலந்து பேசவில்லை.

உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதன் மூலம் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஐ. தே. காவின் மறு அவதாரமாக மாறியுள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்புடன் நாட்டு மக்கள் பொ. ஐ. முன்னணி அரசை ஆட்சியில் அமர்த்தியது இந்நிலையை ஏற்படுத்துவதற்காக அல்ல— என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாத்தளையில் இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-6)

## மார்ச் மாத முற்பகுதியில் மூன்று நாள் பயிற்சிநெறி

வலிகாமம் மேற்கு, ஜன 30

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பணிபுரியும் நிர்வாக உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட எழுதுவினைஞர்கள் ஆகியோருக்கான மூன்று நாள் பயிற்சிநெறி எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் திருமலையில் நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சிப் பிரிவினால் இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் இருந்தும் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரையும், சிரேஷ்ட எழுதுவினைஞர்கள் இருவரையும் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவப் அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவு பணிப்பாளர் திரு. சி. த. மார்க்கண்டு சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (ஐ 175)

## கணிதபாட பெறுபேறு வீழ்ச்சி: காரணத்தை கண்டறிய ஆய்வு

கொழும்பு, ஜன. 30

கடந்த காலங்களில் ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் கணிதபாட அறிவு தரம் குறைந்ததாக இருப்பதற்கான காரணங்கள் குறித்து ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

தேசிய கல்வி நிறுவனம் இந்த ஆய்வை மேற்கொள்ளும்.

1981 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய சுமார் 30 ஆயிரம் மாணவர்களின் கணிதபாட பெறுபேறுகள் பற்றிய மதிப்பீடு ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

கணித பாடத்தில் மாணவர்கள் காட்டும் ஆர்வத்தை மதிப்பீடு செய்வதற்காக எழுத்துப் பரீட்சை ஒன்றை நடத்தி தேவையான தகவல்களைப் பெறுவதற்கு தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

30 — 01 — 1995

திங்கள் இரவு

- ★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — எங்களின் தேசம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — நாதஸ்வர மேதை திரு. கோ. பஞ்சமூர்த்தி அவர்களுடனான செவ்வி
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

31 — 01 — 1995

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — அமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

இனப்பிரச்சினைக்கு தீர்வு:

# வெறும் அபிலாஷை மட்டும் போதாது செயல்திறனும் அரசுக்கு வேண்டும்

### ராவய சிங்களப் பத்திரிகை கருத்து

*கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கில இருப்பது பயங்கரவாதமே அது இனப்பிரச்சினை அல்லவென பல தென்பகுதிப் பத்திரிகைகள் எழுதி வந்த வேளையில் ''ராவய'' என்னும் சிங்களப் பத்திரிகை அக்கூற்றை மறுதலித்துவந்தது.*

*மேலும், இப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வினைக்காண வேண்டிய தேவையையும் வற்புறுத்தி வந்தது.*

*கடந்த ஆட்சி மாற்றத்திற்கு தென்னிலங்கையில் முக்கியமான காரணியாக இப்பத்திரிகை விளங்கியது. இந்த அரசாங்கம் இப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வினைக் காணும் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தது.*

*ஆனால் அரசின் சமீபத்திய நடவடிக்கைகள் சரியான திசை நோக்கிச் செல்லவில்லை என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாக அமைந்த அப்பத்திரிகையின் ஜனவரி 22 ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கத்தை இங்கே தருகின்றோம்.*

ஆரம்பத்தில் இவ்விடயத்தில் அரசு சரியான திசையிலேயே சென்றுகொண்டிருந்தது. சரியான திசையில் சென்றுகொண்டிருந்த இந்தப் பயணம் தர்க்கரீதியான ஒரு தீர்வைக்காண்பதில் முடிவுறும் என்பதற்கான எந்தவொரு திட்டமும் அரசிடமிருப்பதாகத் தெரியவில்லை

இனப்பிரச்சினை இந்நாட்டில் திடீரெனத் தோன்றிய ஒன்றல்ல. இது பல ஆண்டுகளாகப் படிப்படியாகத் தீவிரமடைந்து அதன் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இப் பிரச்சினை காரணமாக பாரிய மனித உயிர் அழிவுகளும் சொத்து அழிவுகளும் ஏற்பட்டன.

**சமாதான முயற்சிகள் போதாது**

முன்னைய அரசாங்கத்தினால் இந்தப் பிரச்சினைக்கு இராணுவரீதியில் தீர்வினைக் காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிகளும், செலவிட்ட பணமும் கொஞ்ச நஞ்சம் அல்ல.

இந் நாட்டில் போருக்குப் பதிலாக சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் முன்னர் யுத்தத்தின் மூலம் தீர்வினைக் காண எடுக்கப்பட்ட முயற்சிகளிலும் பார்க்க அதிகளவு முயற்சிகள் எடுக்கப்பட்டால் மாத்திரமே அது சாத்தியமானதாக அமையும். ஆனால் தற்போது எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் பிரச்சினையின் பரிமாணத்திற்கேற்ப போதுமானவையாகத் தோன்றவில்லை.

சிறப்பாகச் செயற்படும் ஒரு அரசு, பிரச்சினைகளைத்தீர்ப்பது தொடர்பாக முன்னுரிமைப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவாகியுள்ள மோதல் தவிர்ப்பு, சமாதானம் எட்டப்படும் வரை நீடிக்குமா?

இனப்பிரச்சினை இன்று நாடு எதிர்நோக்கும் முக்கியமான சவாலாகும் இருக்கும் ஏனைய பிரச்சினைகளை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு இனப்பிரச்சினைக்கு மாத்திரம்தீர்வினைக் காண்பதில் அரசு வெற்றி பெறுமானால் அது இந்நாட்டின் நல்லதோர் எதிர்காலத்திற்கு வழி அமைக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

தீர்வொன்றினைக் காண்பதற்கான அதிகாரத்தை மக்கள் அரசிற்கு வழங்கியுள்ளனர். மக்கள் அளித்துள்ள இந்த அங்கீகாரமானது இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த எந்த ஒரு அரசுக்கும் கிடைத்திராத ஒரு சாதகமான நிலைப்பாடாகும்.

இருப்பினும் மக்கள் அளித்துள்ள அங்கீகாரத்தை செயல்வடிவாக்கக் கூடிய செயற்திறன் அரசிற்கு இருப்பதாகத் தோன்றவில்லை. இனப்பிரச்சினை தொடர்பான ஜனாதிபதியின் மனச்சாட்சி நேர்மையுடன் கூடிய ஒன்றாக இருக்கக்கூடும் ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக்காணநேர்மையான அபிலாஷை மாத்திரம் போதுமானதல்ல

தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளை முன்னுரிமை அடிப்படையில் [illegible] வேண்டியது சிறப்பான அரசொன்றின் [illegible]

அந்த முன்னுரிமை அடிப்படையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதே முதன்மையான விடயமெனில் அந்த நோக்கத்தை அடைவதற்குப் பொருத்தமான வழிவகைகளைக் காண்பதும் அம் முயற்சியில் வெற்றிபெற முழு ஆற்றலையும் ஈடுபடுத்தக் கூடிய கொள்கைகளை அனுசரிப்பதும் அவசியமாகும்.

இவ்விடயத்தில் முழு நேரம் செயற்பட பல அமைச்சர்களை நியமித்தாற் கூட நாட்டிற்கு எந்தவித இழப்பும் ஏற்படாது.

யுத்தத்தின் மறு தரப்பாரான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதில் தவறேதும் இல்லை. இருப்பினும் யுத்த ரீதியில்தோற்கடிக்க முடியாத சக்தி வாய்ந்த ஒரு கெரில்லா அமைப்புடனேயே பேச்சுவார்த்தையை நடத்துகிறோம் என்பதை அரசு ஒரு போதும் மறந்து விடக்கூடாது

அவ்வாறானவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் போது பிரச்சினையின் பல்வேறு அம்சங்கள் பற்றி நன்கு விளங்கியவர்கள், அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர்கள், அவர்களால் மதிக்கப்படக் கூடியவர்கள், ஆகியோரைக் கொண்ட குழுவினரையே பேச்சுவார்த்தை மேற்கொள்ள அனுப்ப வேண்டும். ஆனால் அரசாங்கத்தினால் பேச்சுவார்த்தைக்கென அனுப்பப்பட்ட குழுவில் அவ்வாறானவர்கள் அங்கம் வகிப்பதாகத் தெரியவில்லை.

**பேச்சுவார்த்தை மட்டும் பிரச்சினையைத் தீர்க்காது**

அவ்வாறே பேச்சுவார்த்தைகள் மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காண முடியாது என்பதனை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வினைக் காண்பது என்பது அனுசரிக்கப்பட வேண்டிய வழிகளில் ஒன்று மாத்திரமே இருப்பினும் இந் நோக்கம் உண்மையில் வெற்றிபெற வேண்டுமாயின் பல்வேறு வழிகளை அரசு பின்பற்ற வேண்டும்.

துப்பாக்கிகளைக் கைகளில் ஏந்திய இளைஞர்கள் அவற்றைக் கைவிட நேரின் அவர்களுக்கென, ஒரு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என அவர்கள் ஐயத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளும் [illegible] அபிவிருத்தித் திட்டங்களை [illegible]

திட்டங்களைக் குறைந்தது கிழக்கு மகாணத்தில் ஆகுதல் செயற்படுத்த வேண்டும்.

தொழில் வாய்ப்புகளிலும் ஏனைய துறைகளிலும் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் இனிமேல் இழைக்கப்பட மாட்டாது என்ற எண்ணம் உருவாகும் விதத்தில் செயற்பட வேண்டும்.

**வடக்கு-கிழக்கு ஆளுநராக ஒரு தமிழரை ஏன் நியமிக்கவில்லை?**

வடக்கு - கிழக்கிற்கான ஆளுநர் வெற்றிடத்தை நிரப்பும் போது சமாதான நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய விதத்தில் ஆற்றல் மிக்க தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவதற்குப் பதிலாக காமினி பொன்சேகா என்ற சிங்களவர் நியமிக்கப்பட்டுள்ளது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இப்பதவிக்கு காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டதை நாங்கள் தனிப்பட்ட காரணத்தினால் எதிர்க்கவில்லை. பிரச்சினையுள்ள ஒரு பிரதேசத்திலுள்ள வெற்றிடத்தை நிரப்பும் முக்கியமான பிரச்சினையில்கூட அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தவறான எண்ணம் தோன்றாத விதத்திற் செயற்பட அரசிற்கு முடியாவிடின் அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என எவ்வாறு நாங்கள் எண்ண முடியும்.

மாகாண ஆளுநர்களாக புதியவர்கள் நியமிக்கப்பட்ட போது ஒரு முஸ்லிம் இனத்தவர்தானும் நியமிக்கப்படாதது துரதிர்ஷ்டவசமானதே. அரசு தனது நண்பர்களுக்கு நியமனங்களை வழங்குவதிலும் பார்க்க நாட்டிலுள்ள பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அப்பிரச்சினைகளைக் கையாளப் பொருத்தமானவர்களை நியமனம் செய்வது அரசின் பொறுப்பாகும். ஆனால் இதற்குத் தேவையான அறிவு அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

தவறுகளைச் சீர்செய்ய விரும்பினால் அதற்கு தற்போதுகூட அதிக காலதாமதமாகிவிடவில்லை. ஆனால் சில பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் போது தேவைக்கு அதிகமான காலதாமதம் ஏற்படுவதால் அப் பிரச்சினை தீர்க்க முடியாதளவிற்கு விஸ்வரூபம் எடுக்கலாம் என்பதை அரசு மறந்துவிடக்கூடாது. (க-10)

## சமூக மேம்பாட்டுக்கான திட்டங்கள் அறிமுகம்

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் நடத்தப்பட்ட சுன்னாகம் தெற்கு கல்லாக்கட்டுவன் கிராமியப் பாசறை நிகழ்வில் வைத்து பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

இந்த வகையில் அக் கிராம மக்களின் பொருண்மியப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு ஆலோசனைகளும் கருத்துக்களும் வழங்கப்பட்டதுடன் 20 பயனாளிகளுக்கு ரூபா2 ஆயிரம் வீதம் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் கோழிவளர்ப்பை மேம்படுத்தும் முகமாக நோய் தடுப்பு ஆலோசனைகள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள் வதிவிட வேளாண்மை பற்றிய கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன் பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம், பழமரக்கன்று விநியோகம் கமக்கார அறிமுக அட்டை விநியோகம், காணிப் பயிர்ச்செய்கைப் பதிவு போன்ற பல பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. (அ)

கிராமப்புற ஆஸ்பத்திரிகளில்

## ஏற்புத்தடை மருந்து ஏற்ற முடியாத நிலை!

அச்சுவேலி, ஜன. 30

கிராமப்புற வைத்திய சாலைகளில் ஏற்பு நோய்த் தடைமருந்து இல்லாததால் தடைமருந்தை உரிய காலத்தில் ஏற்றிக் கொள்வதற்காக நோயாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமப்புற வைத்திய சாலைகளில் குளிர்சாதன வசதி இல்லாமையினால் முன்னர் வாரத்தில் குறித்தொதுக்கப்பட்ட நாட்களில் மட்டும் ஏற்பு நோய்த் தடை மருந்து ஏற்றப்பட்டு வந்தது. கடந்த சிலவாரங்களாக இந்தவசதி இல்லாமல் போய் விட்டது எனக் கூறப்படுகின்றது.

குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் காயமடைந்தோர் ஏற்பு நோய்த் தடை மருந்தை உரியகாலத்தில் ஏற்றிக்கொள்வதற்காக பலமைல் தூரம் பிரயாணம் செய்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று ஏற்றிக் கொள்கின்றனர்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் ஏற்றப்பட்டு வந்த ஏற்பு நோய்த் தடைமருந்து கடந்த இரண்டு வாரங்களாக மருந்து இல்லாதகாரணத்தால்ஏற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## விவசாய பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 30

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் புதிதாக பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நெல் அறுவடையின் பின் அவரையினப் பயிர்ச் செய்கை, மிளகாயில்பயிர்ப் பாதுகாப்பு, மேல்நாட்டு உள்நாட்டு மரக்கறிப் பயிர்களில் பயிர்ப்பாதுகாப்பு, பழப்பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பு, மரக்கறிப்பயிர், பழப்பயிர் நாற்றுமேடை ஆகிய துறைகளிலேயே குறுகியகால பயிற்சி நெறிகள் நடத்தப் படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவோருக்கு ஊக்குவிப்பு பணமாக நாள் ஒன்றுக்கு 20 ரூபா வழங்கப் படும்.

பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்புவோர் எதிர் வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## சேவைக் கால பயிற்சி

தென்மராட்சி, ஜன. 30

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு மூன்று வகுப்புகளின் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி டிறிபேக்கல் ஓரியில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி பெப்ரவரி மூன்றாம் திகதி வரை நடைபெறும். (க-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ருக்குமணி அம்மா

மாவிட்டபுரம், காலஞ்சென்ற குருமணி குமார சுவாமிக் குருக்களின் அன்பு மனைவி ருக்குமணி அம்மா சனிக்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரக் குருக்கள், காலஞ்சென்ற பூரணானந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பஞ்சநாதக் குருக்கள், இரத்தினசபாபதிக் குருக்கள் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [29-1-95] உரும்பராயில் இடம் பெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. கங்காதரசர்மா
[பேரன்]

ஜெயநதன் வீதி,
உரும்பராய் தெற்கு.
உரும்பராய்.

[34922]

## செல்வி நாகரத்தினம் கமலாதேவி

வீமன்காமத்தைச் சேர்ந்த செல்வி நாகரத்தினம் கமலாதேவி 29-1-95 இல் காலமானார். இவர் நாகரத்தினம் காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணபவான் மற்றும் விமலாம்பிகை, சுகுணவதனி (U K.), உஷாதேவி, அம்பிகைபாகன் (U K.), சிறிகணேஸ் (ஆசிரியர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுகிர்தவாசா மானிப்பாய் றோட், உடுவிலில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்தில் [29-1-95] நேற்று ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. நாகரத்தினம்
வீமன்காமம்,
தெல்லிப்பளை.
[34921]

சுகிர்த வாசா,
மானிப்பாய் றோட்,
உடுவில்.

## மோஸஸ் தங்கராசா

புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தவனம், பொன்னம்மா தம்பதியரின் மகன் திரு. மோஸஸ் தங்கராசா 29-01-1995 ஞாயிறு காலை காலமானார்.

இவர் சிறீ சோமஸ்கந்தாக் கல்லூரியின் முன்னைனாள் ஆசிரியரும் புனிதமலர் (இளைப்பாறிய ஆசிரியை மெதடிஸ்த மிஷன் பாடசாலை, புத்தூர்) அவர்களின் அன்புக் கணவரும், சுமதி (கனடா), வணக்கத்துக்குரிய கிறிஸ்றி குமார் (முருங்கன்), 3தவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோர்ஜ் செல்வகுமார் (கனடா), சலோமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜொனியின் அன்புப் பேரனும், பொன்மலர், ஜீவகிரீடம், சறோஜினி சந்திரன், காலஞ்சென்ற அழகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 2-2-1995 வியாழக்கிழமை நடைபெறும்.

தகவல்:
திருமதி பு. தங்கராசா.

மெதடிஸ்த திருச்சபை,
புத்தூர்.

[34916]

## திருமதி அருளம்பலம் இலட்சுமி

குப்பிழானைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு - அருளம்பலத்தின் அன்பு மனைவி திருமதி இலட்சுமி நேற்று (29- 01- 95) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி சிவக்கொழுந்து - பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவஞானசுந்தரம் (சமூகசேவை அலுவலர் - பிரதேச செயலகம் கோப்பாய்), திருமதி புஸ்பவதி - சிவபாதம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முன்னாள் சுன்னாகம் ப. நோ. கூ. சங்க ஊழியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், V. S. பொன்னம்பலம் [முன்னாள் வர்த்தகர் ஆனைக்கோட்டை.] ... எல்ல), கு. சிவபாதம், சி மனோன்மணி, சி. இரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [30-01-95] திங்கட்கிழமை மு. ப. 11 மணியளவில் ஏழாலை களவாவோடையில் நடைபெற்று பூதவுடல் குப்பிழான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சிவஞானசுந்தரம்
(மகன்)

களவாவோடை,
ஏழாலை.

(34920)

## நீக்கிலாப்பிள்ளை அருளப்பு
(இளைப்பாறிய பதிவாளர் சாவகச்சேரி நீதிமன்று)

பெரிய விளானைப் பிறப்பிடமாகக் கொண்டவராகிய நீ. அருளப்பு 29—01—1995 அன்று காலமானார். இவர் மரியம்மா (ராசம்மா) வின் அன்புக் கணவரும், மேரிநீற்றா, மேரி அக்கினெஸ், மேரி திரேசா, மேரியூலியா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஞானம்மா, காலஞ்சென்றவர்களான அல்வினம்மா, அக்கினேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அகஸ்ரீன் [ஜீவா], வேதநாயகம், சுரேந்திரன் அலோசியஸ் கிறிநொன்றி ஆகியோரின் மாமனாரும் செபமாலைநாதன், மரியநாயகம், யேசுதாசன்[தேவா] ஆகியோரின் தாய் மாமனாரும், மரியவதனா, மரிய சுபோதனா, யூட்சுலோஜன் மரியசுவர்ணா, பற்றிக் சுதர்சன், லூட்ஸ்சுதர்சினி, சிந்துஜன், சிவன்சன், கிறவென்ஸ்ரன், கெவின் ஆகியோரின் அன்புப்பேரனாருமாவார்.

இவரின் பூதவுடல், இன்று [30—01—1995] திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இல 18, யாழ். மாட்டீன் லேன் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இறுதிச் சடங்குகளின் பின்னர், பெரியவிளான் புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வீ செபமாலை நாதன்

இல. 18,
மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.

(34915)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# குமண கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வரும்

யாழ்ப்பாணம், ஜன. 30

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் "குமண" நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்ட இக் கப்பல் இன்று காங்கேசன் துறை வந்து நாளை பருத்தித்துறைக்கு வரும் என்றும் —

இக்கப்பலில் சீனி மற்றும் உரவகைகள் எடுத்து வரப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ 3)

# தேசிய சேமிப்பு வங்கி தனியார் மயமாகாது!

"தேசிய சேமிப்பு வங்கி தனியார் மயமாக்கப்படமாட்டாது" என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது

தேசிய சேமிப்பு வங்கி தனியார் மயமாக்கப்படவிருப்பதாக வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்றும்—

அந்த வங்கியை மீளமைப்புச் செய்ய கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் சட்டதிருத்த மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

## யாழ். மாநகர சபைக்கு

# சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்கள் வந்தன!

யாழ்ப்பாணம், ஜன. 30

சூரிய ஒளியில் இருந்து மின் சாரத்தை பெறவல்ல மூன்று மின் உற்பத்தி சாதனங்கள் (சோலார் பனல்) யாழ். மாநகர சபைக்கு அண்மையில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய நாட்டுத் தயாரிப்பான அந்த மூன்று மின் உற்பத்தி சாதனங்களும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், மற்றும் பொம்மைவெளி, யுபிளி ஆகிய மகப்பேற்று விடுதிகளிலும் பொருத்தப்பட உள்ளன.

இதன் மூலம் மின் விநியோகத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார். (ஐ-4)

### பாதுகாப்புக்கு...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையைத் தோற்றுவிக்கும் என்றும் அந்த சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி தெரிவித்தார் என்று 'ஐலண்ட்' பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-க]

### அமைச்சர்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவுக்குப் பயணமானார்.

இலங்கையில் இருந்து தைக்கப்பட்ட ஆடைகளை அமெரிக்கா அதிகளவில் கொள்வனவு செய்ய வேண்டும் என அவர் அமெரிக்க அதிகாரிகளிடம் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-க]

### மீண்டும்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கத்தக்கதென்று— பிரெஞ்சு செய்தி ஸ்தாபனத்தின் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கிழக்கில் தமது பழைய நிலைகளை மீண்டும் நிறுவுவதில் ஈடுபடுவதானது மார்ச் மாதம் மழை நின்றதும் போரை மீண்டும் அவர்கள் தொடக்கக்கூடும் என்ற சந்தேகத்தை எழுப்புவதாக இராணுவத் தரப்பில் கூறப்படுவதாகவும் அவர் தமது செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராணுவத்தினரும் தம்மை போருக்கு தயாராக்குவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

### மாணவர்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முடியும் என்றும்—

அமைச்சரவை அந்தக் கொள்கையை மாற்றும் பட்சத்திலேயே கூடுதலான மாணவர்களை அனுமதிக்க முடியும் என்றும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள கொள்கையின்படி —

பல்கலைக்கழக அனுமதிக்கு ஒவ்வோர் கல்வியாண்டிலும் 40 வீத மாணவர்கள் தகுதி அடிப்படையிலும் —

55 வீதமானவர்கள் மாவட்ட அடிப்படையிலும்—

5 வீதமானவர்கள் பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதேவேளை —

அடுத்த வாரம் கொழும்பு செல்லவுள்ள யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் மாணவர் அனுமதி விடயம் தொடர்பாக கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் தற்போதைய கொள்கையை மாற்றுமாறு ... உயர் கல்வி அமைச்சரை கோருவார் என்றும் அறிய வந்தது. (ஐ-3)

# தொழிலாளர் நேர்முகப்பரீட்சை

கொழும்புத்துறை, ஜன. 30

யாழ்ப்பாணம் சுகாதாப் சேவைகள் மாகாணப் பிரதிர பணிப்பாளர் பணிமனையில் சமய சுத்திகரிப்புத் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று 30 ஆம் திகதி திங்கள் நாளை 31 ஆம் திகதி செவ்வாய் பெப்ரவரி 3 ஆம் திகதி வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8 - 30 மணி தொடக்கம் நடைபெறும்.

நேர்முகப்பரீட்சையைத் தொடர்ந்து 31 ஆம் திகதி செவ்வாய், 3 ஆம் திகதி வெள்ளி, 6 ஆம் திகதி திங்கள் ஆகிய தினங்களில் முற்பகல் 8 - 30 மணிக்கு செயல்முறைப் பரீட்சை தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் (தற்போது மானிப்பாய் கிறீது மெமோரியல்வைத்தியசாலை நடைபெறுமென) யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீ காந்தா தெரிவித்துள்ளார்.

### புலிகள்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறியும் விருப்பம் கொண்டதாகவும் — ராஜாங்க அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் அங்கு நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் —

பிரச்சினைக்கு முழுமையானதும் நிரந்தரமானதுமான ஒரு தீர்வைக் காண்பதில் உள்ள சாதக நிலைமை குறித்தும் —

என்ன சொல்லப் போகிறார் என்பதனை அறிவதில் நாம் மிகுந்த அக்கறையாக உள்ளோம் — என்றும் ராஜாங்க அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

ஸ்ரீலங்காவில் மனித உரிமை பேணப்படும் விவகாரத்தில் பெரும் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் -

இந்த முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்காவுக்கு, அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு தாம் ஆதரவளிக்க இருப்பதாகவும் — அமெரிக்க காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

## ஆலயங்களில்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலில் தை அமாவாசையை ஒட்டி இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு அபிராமிப்பட்டர் விழாவும் அதனைத் தொடர்ந்து 4-30 மணிக்கு சுவாமி வீதிவுலாவும் இடம்பெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

சண்டிலிப்பாய் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் நடைபெறும் மாதாந்தஇளம் பிறை விழாவில் இன்று "மணிகண்டன்" என்ற தலைப்பில் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவ. குமாரனின் தெய்வீகப் பேருரை இடம்பெறும். [ஐ]

★ ★ ★

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு அம்புலி காட்டிய அபிராமித் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

விசேட ஆராதனைபூசையை அடுத்து இரவு 6-30 மணிக்கு தோடெறிந்து சந்திரன் காட்டிய நிகழ்ச்சி இடம்பெறும். (க-51)

★ ★ ★

பருத்தித்துறை, கோட்டு வாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலய அபிராமிப் பட்டர் விழா இன்று திங்கள் பிற்பகல் நடைபெறவுள்ளது.

பாட்டு, சிறப்புச் சொற்பொழிவுகள், அருள் ஆசியுரைகள், அபிராமி அந்தாதி இசையாராதனை என்பன விழாவில் இடம் பெறவுள்ளன.

## சிதம்பரம் ஜெயராமன் காலமானார்

பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகர் சிதம்பரம் ஜெயராமன் நேற்று முன்தினம் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 76. (க)

### ஈழ அகதிகள்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்சமயம் எடுத்து வரும் கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்தே கனடாவும் தனது போக்கைக் கடுமைப்படுத்தும் அறிகுறிகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக கனடாவின் ரொறொன்ரோவில் உள்ள யூனிவசிற்றி அவெனியுவில் அமைந்துள்ள அகதிகள் சபையின் நடவடிக்கைகளில் திடீர் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து செல்லும் ஈழத் தமிழ் அகதிகள் தஞ்சம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைள் இந்த அகதிகள் சபையிலேயே நடைபெற்று வருகின்றன.

தஞ்சம் கோரிச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் இதுவரை காலமும் அங்கு துரித கெதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் இனிமேல் ஈழத் தமிழ்ர்கள் தஞ்சம் கோரிச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் துரித கெதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து துரித விசாரணைக்கென தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் முழு அளவிலான விசாரணைக்காக ஒத்திப் போடப்பட்டுள்ளன.

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் — குறிப்பாக கொழும்பில் — தமிழர்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் இல்லை என்று காரணம் கூறி பல தமிழர்களின் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் கணிசமான எண்ணிக்கையானவை 45 வயதை தாண்டியவர்களுடையவை என்றும் —

ஆயினும் —

45 வயதுக்குக்கு உட்பட்டவர்களது விண்ணப்பங்களும் இதே காரணத்துக்காக நிராகரிக்கப்படலாம்என்று கனடா தமிழ் வட்டாரங்களில் அச்சம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## இளம் யுவதியைக் கொன்று...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாய்களின் கோரத் தாக்குதலில் இருந்து அந்த இளம் பெண்ணை மீட்க பொலீஸார் ஏழு மணி நேரம் போராடினர். எனினும் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற அவர்களால் முடியாமற் போனது.

இறுதியில் ஒருவாறு அந்த மூன்று நாய்களையும் பொலீஸார் சுட்டுக் கொன்றனர்.

நாய்களால் கடித்துக் குதறிச் சின்னாபின்னப்படுத்தப்பட்ட அந்த இளம் பெண் இறப்பதற்கு முன் பெரும் வேதனைக்குள்ளாகியிருப்பார் என அவரைக் காப்பாற்ற முயன்ற டாக்டர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தை அடுத்து நாய்களின் சொந்தக்காரர் நகரை விட்டுத் தலைமறைவாகியுள்ளார் [ஐ]

# பிரதி அமைச்சர்களுக்கு மேலும் ரூ.1,000 அலவன்ஸ்

கொழும்பு, ஜன. 30

பிரதி அமைச்சர்களின் சம்பளம் மேலும் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

சகல பிரதி அமைச்சர்களுக்கும் உபசார அலவன்ஸாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிரதி அமைச்சர்கள் நியமனம் பெற்றது முதல் இந்த அலவன்ஸ் கிடைக்கக் கூடியதாக பொது நிர்வாக அமைச்சர் திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவார்.

அடுத்த மாதம் ஏழாம் திகதி அமைச்சர் இப்பிரேரணையைச் சமர்ப்பிப்பார் என்று அறிய வந்துள்ளது. (அ)

### கல்வி...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரி 23 ஆம் திகதி நீதிமன்றில் அமைச்சரை ஆஜராகுமாறு பணித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று காலி தங்கெதர தொகுதியின் ஐ. தே. க. அமைப்பாளரான சமன்குமார செனவிரத்தின என்பவரை தாக்கிக் காயப்படுத்தியதாக அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஐ)

## மாணவர் அறிவியற் கழகம்

# அறிமுகமும், உறுப்பினர் இணைத்தலும்

**நோக்கம்**

(அ) தமிழீழ மாணவர்களின் அறிவியல் ரீதியான ஆற்றல்களை வெளிக்கொணர்தல்.

(ஆ) அடிப்படை வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் அறிவியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

(இ) அறிவியல் ரீதியான ஆராய்ச்சிகளில் ஈடுபட ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் ஊக்குவித்தலும்.

(ஈ) அறிவியல் ரீதியாக வளர்ந்து வரும் நவீன உலகத்துடன் எமது தாய் நாடும் இணைந்து செல்லும் வண்ணம் விடுதலைப் போராட்ட காலகட்டத்திலும் எமது மாணவர்களைத் தயார்ப்படுத்தல்.

**செயல்பாடுகள்**

(அ) அறிவியல் நூலகம்
(ஆ) ஆய்வு கூடங்கள்
  (1) பொது விஞ்ஞான ஆய்வுகூடம்
  (2) இரசாயனவியல் ஆய்வுகூடம்
  (3) விலங்கியல் ஆய்வுகூடம்
  (4) தாவரவியல் ஆய்வுகூடம்
  (5) பௌதிகவியல் ஆய்வுகூடம்
(இ) ஆராய்ச்சிக் கூடங்கள்
(ஈ) கணனிக் கூடம்
(உ) இலத்திரனியல் கூடம்
(ஊ) அறிவியல் விளக்கக் கூடம்
(எ) அறிவியல் ஒளிப்படக் காட்சிக் கூடம்
(ஏ) பொறிமுறை உபகரணங்கள் தயாரிப்புக் கூடம்.

முதலாவது கட்டமாக அறிவியல் நூலகம், பொது விஞ்ஞான ஆய்வுகூடம், அறிவியல் விளக்க வகுப்புகள், அறிவியல் ஒளிப்படக் காட்சி ஆகிய செயல்பாடுகள் ஆரம்பமாகின்றன. அடுத்த கட்டமாக ஏனைய செயல்பாடுகளும் மிகவிரைவில் ஆரம்பமாகும்.

எனவே மாணவர்கள் உறுப்பினராக இணைந்து பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**உறுப்புரிமை பெறுவதற்கு**

(அ) உறுப்பினர் விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்படும் போது உறுப்புரிமைப் பணம் ரூபா 100-00 செலுத்த வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் ஒப்படைக்கப்பட்டதும் தற்காலிக அனுமதி அட்டை, உறுப்பினர் எண்ணும் வழங்கப்படும்.

உறுப்பினர் விண்ணப்பப்படிவத்தையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கும், பாடசாலை மாணவர்கள் வகுப்பு ரீதியாக ஆசிரியர்களுடன் இணைந்து ஆய்வுகூட வசதியைப் பயன்படுத்துவதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

நிர்வாகச் செயலகம்
மாணவர் அறிவியற் கழகம்,
காங்கேசன்துறை சாலை,
கோண்டாவில்.

அன்பளிப்பு:-
**குகன் கல்வி நிலையம்**
ஆவரங்கால், புத்தூர்.
[சி-456]

## ST. PATRICK'S COLLEGE – O.B.A.

# DR. J. P. C. பிலிப்ஸ் அஸ்தி அஞ்சலி

எமது சங்கத்திற்கு புத்துயிரூட்டி உறுதுணையாயும், பல்துறைகளில் பொது நல சேவையாளனுமாய் திகழ்ந்த

**DR. J. P. C. பிலிப்ஸ் அவர்களின்**

அஸ்தி அஞ்சலி நிகழ்ச்சி **1995- 02- 01** [புதன்] மாலை **4. 00**மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் ஆன்ம சாந்தித் திருப்பலியுடன் தொடங்கும். அங்கிருந்து அவரின் அஸ்தி ஊர்வலமாக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். தொடர்ந்து எமது சங்க வளாகத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

எமது சங்க உறுப்பினர், அவரின் உறவினர், அன்பர், அபிமானிகள் அனைவரும் வருக.

புனித பத்திரிசியார் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

59, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/455)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org